**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.643/2020 இ.ம.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீரம்யா | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் 1, 2 ம் மைனர் வாதிகளின் தாயார் மற்றும் பாதுகாவலர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 02.03.2006 ம் தேதியிட்ட என்னுடைய திருமண அழைப்பிதழ் அசல் **வா.சா.ஆ.1.** 17.02.2000 ம் தேதியிட்ட கருப்பண கவுண்டர் மற்றும் குடும்பத்தினருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2.** 13.11.2013 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதியின் பெயருக்கு மாரப்பன் மற்றும் தர்மலிங்கம் எழுதிக் கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3.** 02.02.2016 ம் தேதியிட்ட 6 ம் பிரதிவாதி பெயரில் மாரப்பன் வகையரா எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4.** 19.06.2017 ம் தேதியிட்ட மாரப்பன் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5.** 21.06.2017 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி மாரப்பன் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6.** 28.12.2017 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதியால் 7 ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7.**

20.06.2019 ம் தேதியிட்ட 7 ம் பிரதிவாதி 8, 9 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8.** 22.07.2019 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதியால் 10 ம் பிரதிவாதிக்கு கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9.** 02.06.2020 ம் தேதியிட்ட 10 ம் பிரதிவாதியால் 11 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10.** 03.06.2020 ம் தேதியிட்ட 11 ம் பிரதிவாதியால் 12 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11.** 19.06.2020 ம் தேதியிட்ட 6 ம் பிரதிவாதியால் 13 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12.** 01.01.2000 முதல் 03.07.2020 வரையிலான 04.07.2020 ம் தேதியிட்ட வில்லங்க சான்றின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.13.** 10.08.2020 ம் தேதியிட்ட தாவா 1 வது அயிட்ட சொத்தின் வழிகாட்டி மதிப்பின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.14.** 10.08.2020 ம் தேதியிட்ட தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழிகாட்டி மதிப்பின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.15.** 10.08.2020 ம் தேதியிட்ட தாவா 3 வது அயிட்ட சொத்தின் வழிகாட்டி மதிப்பின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.16.** 01.01.2000 முதல் 18.12.2023 வரையிலான 19.12.2023 ம் தேதியிட்ட வில்லங்க சான்றின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேலும் சில ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)